தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY
விலை : 100/= இதழ் 111 25.05.2025

# அட்சய பாத்திரம் பப்பாளிப்பழம்



- மழை நீர் சேகரிப்பு என்றால் என்ன?
- முந்தானை ஆறு ஆற்றப்படுக்கை அபிவிருத்தித் திட்டம்
- அட்சய பாத்திரம் பப்பாளிப்பழம்
- இலங்கையின் மின்சாரக் கட்டணங்கள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பு
- பார்வை

தமிழர் பொருண்மியம்
வாரமலர் TAMILS ECONOMY




# மழைநீர் சேகரிப்பு என்றால் என்ன?

மழை நேரத்தில் கூரை மேல் விழும் நீரை, குழாய்களூடாக சேகரித்து, தக்க முறையில் வடிகட்டி, பயனுள்ளதாகச் சேமித்து வைத்திருப்பது.

இலங்கையின் கிராமப்புற சூழலுக்கேற்ப இயற்கையான முறை:

1. **கூரைமேல் மழைநீர் சேகரிப்பு (Roof Catchment System):**

- சிமெண்டு / அச்பெஸ்டாஸ் (காசா) / டைல் அல்லது சிமெண்டு கூரை மேல் விழும் மழைநீர்




படம் 8.13: வீட்டில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு

- பீழி (gutter) மூலம் கீழே விடப்படும்
- தோண்டப்பட்ட தொட்டி அல்லது கலவையற்ற பிளாஸ்டிக் தொட்டியில் சேமிக்கப்படுகிறது

**2. தொட்டி வகைகள்:**


- தாழ்வான நிலத்தில் குழி தோண்டு உலோக/கான்கிரீட்/HDPE தொட்டி அமைக்கலாம்
- மேல் நிலத்தில் நிறுத்தும் Poly tank (1000–5000L)

**3. நீர் வடிகட்டி முறை (Filtration):**

- முதலில் இழைத் தடுப்பு (first flush diverter)
- பின்னர் மணல் + கற்கள் + active carbon கொண்ட இயற்கை வடிகட்டி அமைப்பு

**4. சேகரிக்கப்பட்ட நீர் பயன்பாடு:**

- கைகள் கழுவுதல், குளியல், தோட்ட பாசனம், பசுமை நிலப் பராமரிப்பு
- வடிகட்டிய பின் குடிநீராக மாற்றம் (chlorine/alum/boiling filter combo)




படம் 8.14: நீர் வழங்கல் மூலங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு

### 5. நீண்ட கால சேமிப்பு நுட்பங்கள்:

a. திறந்த தொட்டிக்கு மூடி அமைத்தல்
பூச்சிகள், அழுக்குகள், பறவைகள் வராமலிருக்க

b. பாசி மற்றும் கழிவுகள் அகற்ற தொட்டியை 3 மாதங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்தல்

c. முழுதாக நிரம்பியபின் தவறாக சிதறாமலிருக்க / overflow pipe அமைத்தல்

d. தனி குழாய் வடிகால் அமைத்தல் வண்டியில் தேக்குநீர் பாயாமல் பாதுகாப்பு

### 6. மழைநீரை மூன்று மாதங்கள் பாதுகாப்பாக வைத்துப் பயன் படுத்த வேண்டுமானால்...

✅ **1. First Flush Diverter:**

- மழையின் ஆரம்பத்தில் கூரையில் விழும் கசப்பு, தூசி, கழிவுகள் – இது முதலில வெளியேற்றப்படும்
- முதற்கட்ட 'தூய்மை நீரை' மட்டும் தொட்டிக்கு அனுப்ப வேண்டும்

✅ **2. நன்கு மூடிய தொட்டி:**

- தொட்டி மூடியுடன் (sealed lid) இருக்க வேண்டும்
- மசாஜ்கள், பூச்சிகள், ஒளி புகாதபடி இருக்க வேண்டும்

- UV light க்கும் வெளிச்சத்துக்கும் எதிராக இருத்தல் பசை வளராமல் இருக்கும்

எடுப்பது தவறு – அது மேலிருந்த மாசுபட்ட படலம் கலப்பதற்கான வாய்ப்பு



✅ **3. வடிகட்டும் முறை:**

- நீர் தொட்டிக்கு வரும்போது மணல் + கரியீடு + கற்கள் உடன் ஒரு இயற்கை multi-layer filter அமைக்க வேண்டும்

- சிலர் மேலதிகமாக cloth mesh + gravel + chlorine disc கூட சேர்க்கிறார்கள்

✅ **4. நீர் எடுத்தல் முறைகள்:**

- தொட்டிக்கு கீழ் tap (valve) வைத்திருக்க வேண்டும்.

- மேல் பக்கத்தில் தோய்த்தே

💦 **பயன்பாடு முன் சோதனை (*Before Use Check*):**

✅ வாசனை, நிறம், தோற்றம் – மாறவில்லை என உறுதி செய்யவேண்டும்.

✅ நெறிப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்குள், நன்கு வடிகட்டிய நீர் குடிநீராகவும் பயன்படுத்தப்படுகிறது.

🔥 '**நீர் மூன்று மாதம் இருக்கும். ஆனால் கவனம் தினமும் தேவை.**'

3 மாதத்திற்கு ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டுமென்றால் உள்ள நீரை என்ன செய்வது?

**மூன்றாவது மாதம் தொடங்கும் முன் செய்யவேண்டியது:**

✅ மீதமுள்ள நீரை தோட்ட பாசனம், கழிவறை flushing, வீட்டு சுத்தம் போன்ற துணைபயன்களுக்கு பயன்படுத்துங்கள்

❌ அதே நீரை குடிநீர் அல்லது கை கழுவ பயன்படுத்தக் கூடாது

அதன்பிறகு:

✓ தொட்டியை முழுமையாக காலி செய்யவும்

✓ உள்ளே தேங்கி இருக்கும் கச்சா, பசை, புகைமா நீரை புறநோக்கே ஓடவிடவும்.

✓ சுண்ணாம்பு அல்லது வேதியியல் சுத்திகரிப்பு செய்த பிறகு மழையை மீண்டும் சேகரிக்கத் தொடங்கலாம்.

💧 1000L மழைநீர் – எவ்வளவு நாட்களுக்கு பயன்படும்?

✅ சரியான முறையில் சேமிக்கப்பட்ட மழைநீர், மூன்று மாதங்களுக்கு வரை பாதுகாப்பாக பயன்படுத்தக்கூடியது.

ஒரு நபருக்கு நாளாந்த நீர் தேவை (approx)

- கைகளை கழுவ / வாஷ்ரூம் 15–25 L
- சமையல் / குடி நீர் (Filtered) 5–10 L
- மொத்தம் (ஏற்கனவாக) 30–50 L / நாள்

அதாவது:

- 1000L = சுமார் 20–30 நாட்களுக்கு 1 குடும்பம் (4 பேர்) பயன்படுத்தலாம்.
- 2000L = சுமார் 1.5 மாதம்

🔵 **நீண்ட கால இலக்கு:**

- குடிநீர் தன்னிறைவு (Water Independence)
- நீரின் மதிப்பு பற்றி பள்ளியில் இருந்து விழிப்புணர்வு
- குடும்பம் ஒன்றுக்கு ஒரு இயற்கை நீர்த்தொட்டி (1000–2000L)

🔵 **சிறந்த பரிந்துரை :**

- ஒவ்வொரு குடும்பமும் ஒரு 1500L தொட்டி
- மூன்று மாத சுழற்சி; சிறிய பைப்லைன் மூலம் overflow மற்றும் first flush diverter அமைப்பு
- தொட்டி மீது மூடியுடன் பூச்சிக் கொல்லி net பயன்படுத்த வேண்டும்.

**நிஷாந்தி பிரபாகரன்**

தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY



# முந்தானையாறு ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் பிரதேச விவசாயிகள் ஆதங்கம்?

கிழக்கு மாகணத்தின் விவசாய துறையின் அபிவிருத்தியின் முக்கியமான திட்டமே இது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தின் ஊடாக யாரும் பயன்படுத்தாமல் வீணாகவே கடலை சென்றடையும் முந்தானை ஆற்றை மையப்படுத்தி திட்டமிடப்பட்டுள்ள பல்துறை அபிவிருத்தி செயற்திட்டமே முந்தானை ஆற்றுப்படுக்கை செயற்திட்டமாகும். இச் செயற்திட்டம் பிரதானமாக நீர்ப்பாசன அபிவிருத்தி ஊடாக விவசாய மேம்பாடு, குடிநீர் தேவையினை பூர்த்தி செய்தல் மற்றும் வெள்ள அனர்த்த பாதிப்பு குறைப்பு போன்ற பிரதான திட்டங்கள் அதில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இச்செயற்திட்டத்தின் ஊடாக அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா ஆற்றிற்கு குறுக்காக புதிய மாகாஓயா நீர்த்தேக்கத்தை அமைப்பதும். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலளார் பிரிவில் தற்போதுள்ள உறுகாமம் மற்றும் கித்துள் குளங்களை இணைத்து பல்தேவையுடைய நீர்தேக்கத்தினை அமைப்பதும் பிரதான செயற்பாடாக உள்ளதுடன் மேற்படி நீர்தேக்கங்கள் ஊடாக அம்பாறை மாவட்டத்தின் மகாஓயா பிரதேசத்தில் சுமார் 8000 ஏக்கர் நீர்ப்பாசன காணி சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என இரண்டு போகங்கள் நெற்செய்கை பண்ணக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன்

மாகாஓயா மற்றும் பதியதலாவ பிரதேச மக்களுக்கான குடிநீருக்கான நீரை பெற்றுக் கொள்ளகூடிய செயற்திட்டங்களும் திட்டமிடப் பட்டுள்ளன. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் உறுகாமம், கித்தூள் பல்தேவையுடைய நீர் தேக்கத்தின் ஊடாக தற்போது உறுகாமம் குளத் திற்குகீழ் உள்ள சுமார் 10000 ஏக்கர் நீர்ப்பாசன வயற்காணிக்கு மேலதிகமாக தற்போது மழையை நம்பி செய்கை பண்ணப்படும் சுமார் 8500 ஏக்கர் வயற்காணி நீர்பாசன வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு இருபோகங்களும் செய்கை பண்ணக்கூடிய வகையில் 18500 ஏக்கர் காணி நீர்ப்பாசன காணியாக மாற்றம் செய்வதுடன் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உன்னிச்சை குளத்தினால் வழங்கப்படும் குடிநீர் தேவைக்கு மேலதிகமாக மேற்படி நீர்தேக்கத்தில் இருந்து குடிநீர் வழங்க திட்டமிப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக சித்தாண்டி பிரதேசத்தில் வருடாவருடம் ஏற்படும் பெருவெள்ளப் பாதிப்புக்களை உரிய நீர் முகாமைத்துவ கட்ட மைப்பினை உருவாக்குவதன் மூலம் குறைத்துக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளன.

இச்செயற்திட்டம் 1980 ஆண்டு காலப் பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்தினால் திட்டமிடல் செயற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் 2016 ஆம் ஆண்டு நீர்ப்பாசன அமைச்சினால் அமைச்சரவை அனுமதி பத்திரம் சமர்பிக்கப்பட்டு இச்செயற்றிட்டத்திற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டதுடன், இத்திட்டத்திற்கான இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு அமைவாக நிதி வழங்குனர்களாக பிரான்ஸ் நாட்டின் பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவகம் முன்வந்தனர். அதன் அடிப்படையில் மேற்படி திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட சாத்தியவள ஆய்வறிகை நீர்ப்பாசன திணைக்களத்தினால் செய்யப்பட்டதுடன் பின்னர் மேலதிக சாத்தியவள ஆய்வறிக்கையை நிதி வழங்கும் நிறுவகத்தினால் செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட வேலைகளை செய்தற்காக நீர்ப்பாசன அமைச்சினால் திட்ட முகாமைத்துவ அலகு உருவாக்கப்பட்டு, அதன் அலுவலகம் செங்கலடி நீர்ப்பாசன திணைக்கள வளாகத்தில் அமைக்கப்பட்டு திட்டத்திற்கான விசேட உத்தியோகஸ்தர்களும் நீர்ப்பாசன அமைச்சினால் நியமிக்கப்பட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து துறைசார் ஆய்வறிக்கைகள் நிதி வழங்குனர்களின் ஆலோசனை குழாமின் ஒத்துழைப்புடன் செய்யப்படுக் கொண்டிருக்கையில், கடந்த 2023 நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக திட்ட முகாமைத்துவ அலகும் திட்டமும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் நீர்ப்பாசன திணைக்களத்திடம் திட்டம் கையளிக்கப்பட்டது.

பிரதேச விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த மேற்படி திட்டத்திற்காக திட்ட அலுவலகம் உருவாக்கப்பட்டு திட்டத்திற்கான உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு தொடர் கலந்துரையாடல்கள் நடைபெற்ற போதும் விவசாயிகளுக்கு மேற்படி திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டு அதன் பிரதிபலன்களை அனுபவிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும், எதிர்பாhர்த் திருந்தனர். ஆனால் கடந்த 2 வருடங்களாக திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் மீள் ஆரம்பிக்கப்படுவதற்காக பிரதேச விவசாயிகளும் மாவட்ட விவசாய சம்மேளன பிரதிநிதிகளும் பல முயற்சிகளை மேற்கொண்டும் இதுவரை அத்திட்டம் மீள் ஆரம்பிக்கப்படும் என உறுதியாக யாரும் உத்தரவாதம் வழங்கவில்லை என்பது விவசாயிகளின் பாரிய ஆதங்கமாக உள்ளது.

அத்துடன் மேற்படி திட்டத்தை பிரதேச விவசாயிகள் பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியுடன் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுப்பதற்கு பல்வேறு காரணங்களையும் முன் வைக்கின்றனர்.

- 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து திட்டமிடப்பட்டு கொண்டிருக்கும் இத்திட்டம் கடந்த 2016 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அனுமதியின் பின்னர் பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியுடன் நடைமுறைபபடுத்தப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் செயற்பாட்டு முறையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

- 2017ஆம், 2020 ஆம் ஆண்டில் இருந்து திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென ஆய்வுகளை மேற்கொள்ள வருகைதந்த நிதி நிறுவனங்களின் ஆலோசகர்கள் மற்றும் பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் திட்ட பிரதேசத்திற்கு விஜயம் செய்து இத்திட்டம் உலக வங்கியின் சுற்றுசூழல் மற்றும் சமூக பாதிப்புக்கள் தொடர்பான கொள்கைகளுக்கு அமைவாக துரித கதியில் நிறைவு செய்வோம் என உறுதிமொழியினை எமது விவசாய அமைப்பினர்களுக்கு வழங்கியிருந்தார்கள்.

- இத்திட்டத்தினை வெளிநாட்டு நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும்போது மிகவிரைவாக திட்டம் நிறைவு செய்யப்படும் எனவும் எமது பிரதேச விவசாயிகள் வெள்ளம் மற்றும் வரட்சி பாதிப்புக்களில் இருந்து மிகவிரைவாக மீட்சி பெறுவார்கள் என்பதுடன் விரைவாக நன்மை பெறுவார்கள் என எதிர்பார்க்கின்றனர்.

- இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மகாஓயா மற்றும் கித்துள் உறுகாம குளங்களின் கட்டுமானம் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே அப்பிரதேச மக்களுக்கு நன்மை யளிக்கும் செயற்பாடாக அமையும் என கருதுகின்றது.

- தற்போது வெள்ள மற்றும் வரட்சி காலங் களில் முறையான நீர் முகாமைத்துவ கொள்கை யின்மையினால் பிரதேச விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர் ஆனால் இத் திட்டம் பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தும் சந்தர்பங்களில் முறை யாக ஆற்றுப்படுக்கை நர்முகாமைத்துவ கொள்கைகள் வகுக்கப்படும் என ஆய்வில் கலந்துகொண்ட ஆய்வாளர்களினால் கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

எனவே மேற்படி விடயங்களை கருத்திற் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பாதிப்புக்களை குறைக்கும் வகையில் பிரான்ஸ்

நாட்டின் நிதியுதவியுடன் மிக விரைவாக திட்டத்தினை ஆரம்பித்து மிகவரைவாக நிறைவுசெய்து விவசாயிகள் திட்டத்தின் நன்மையினை விரைவாக அனுபவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இந்த திட்டம் நிறுத்தப்படவில்லை அத்திட்டத் திற்கென ஒரு பணிப்பாளரும் நியமிக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் அந்த பணிப்பாளரிடம் வினவுவதற்காக கூட்டம் ஒன்றிற்கு நாம் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தோம் அவர் அதில் கலந்து கொள்ளவில்லை. இத்திட்டம் தொடர்பில் நாம் ஜனாதிபதி வரைக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். மீண்டும் அத்திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரிடம் வினவவுள்ளோம், அல்லது அடுத்துவரும் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின்போது அவரிடம் வினவவுள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜஸ்ரீனா யுலேக்கா முரளிதரன் தெரிவிக்கிறார்.

இத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்து வது தொடர்பில் நான் முயற்சிகளை மேற் கொண்டுள்ளேன். நாடு தற்போதிருக்கும் நிலையில் இன்னுமொரு நாட்டிடம் கடன் பெற்று அபிவிருத்தி செய்யும் நிலை தொடர்பில் ஆராயவேண்டியுள்ளது. இதில் சர்வதேச நாணய நிதியத்தின் பார்வையும் உள்ளது. இது இவ்வாறு இருக்க இவ்விடையம் தொடர்பில் பிரதியமைச்சர் சுசில் ஜெயந்தவிடம் நான் எடுத்துரைத்துள்ளேன். இத்திட்டத்தை பொறியியலாளர்களின் கருத்துக்களையும் ஆராய்ந்து நம் நாட்டு நிதியிலேயே குறைந்த அள வில் முன்னெடுக்கலாமா எனவும் ஆராயப்பட்டு வருகின்றன. எனினும் இத்திட்டத்தின் முழு விபரம் அடங்கிய தொகுப்பை ஆராய்ந்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என என்னிடம் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். நாம் தற்போது அமைச்சரவைக்கு இத்திட்டம் தொடர்பான முழு விபரம் அடங்கிய தொகுப்பை வழகுவதற்குரிய ஆவணங்களை தயார் செய்து கொண்டிருக்கின்றேன். என மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்திக்குழு தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு தெரிவிக்கின்றார்.

அரசாங்கத்தினதும், அரசியல் வாதிகளினதும் கருத்துக்கள் இவ்வாறு அமைந்தாலும் 1980 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையில் இலங்கையை காலத்திற்கு காலம் மாறி மாறி ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் கிழக்கு மாகணத்தின் விவசாய துறையின் அபிவிருத்தியின் முக்கியமான திட்டமான முந்தானையாறு ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி திட்டத்திற்கு உயிர் கொடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தாமலிருப்பது ஏன் என மட்டக்களப்பு மாவட்ட மக்களும், விவசாயிகளும் கேள்வி எழுப்புகின்றனர். இவ் வாறானதொரு திட்டம் பிறிதொரு மாவட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தலும் இவ்வாறுதானா சுமார் 45 வருடகாலமாக கால இழுத்தடிப்புக்கள் செய்திருப்பார்கள் அல்லது அவற்றை முன்னின்று முடித்திருப்பார்களா? எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது அது மிகவும்; வரப்பிரசாதமாக அமையும் என்பதோடு, “பராக்கிரம பாகு மன்னன்” கூறியது போல் மட்டக்களப்பில் இயற்கையாகவே காலத்திற்கு காலம் பொழியும் மழை நீரில் “ஒரு சொட்டுத் தண்ணீரும் வீணாக கடலைச் சென்றடையாமல் அவற்றில் ஒரு பகுதியாவது தேக்கி வைக்கப்படும். அவ்வாறு பெருமளவு நீர் தேக்கி வைக்கப்படுமிடத்து மேலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு போகங்களும் வேளாண்மை செய்கை மேற்கொள்ள முடியும் என்பதோடு காலத்திற்கு காலம் மேட்டுநிலப் பயிற்செய்கைகளையும் மேற்கொள்ள முடியும். இதனால் மாவட்டத்தின் வறுமை குறைவடைந்து கிராமிய பொருளாதாரம் மேலோங்கும் எனலாம். எனவே துறைசார்ந்தோரும், அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் 45 வருடகாலமாக புகைந்து புகைந்துள்ள இத்திட்டத்திற்கு ஒளி கொடுத்து அந்த ஒளியில் மக்கள் வாழ்வதற்கு திடங்கற்பம் பூண வேண்டும் என்பதுவே மட்டக்களப்பு வாழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.



*வ.சக்திவேல்*
*சமூக ஆய்வாளர்*



# சத்துக்களை வாரி வழங்கும் அட்சய பாத்திரம் பப்பாளிப்பழம்!

பப்பாளி பழத்தின் பூர்வீகப் பெயர் பறங்கிப்பழம். இது சுமார் 50 வகையான நோய்களை குணப்படுத்தும் மருத்துவ குணங்களைக் கொண்டது. அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோய் உள்ளவர்கள், உடல் கொழுப்பு மிகுதியால் அவதிப்படுகிறவர்கள் என அனைத்துத் தரப்பினரும் சாப்பிட உகந்த பழம் பப்பாளி. நுரையீரல் பிரச்னைகளை சரி செய்ய 200 கிராம் பப்பாளி தினமும் சாப்பிட சரியாகும்.

இதில் நார்ச்சத்து, புரதம், கார்போ ஹைட்ரேட்டுகள், வைட்டமின் சி போன்ற பல்வேறு ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. குறிப்பாக, பப்பாளி உட்கொள்வது இரத்த அழுத்த நோயாளிகளுக்கு நன்மை தருகிறது. கோடைக்காலத்தில் பப்பாளியை சரியான நேரத்தில் உட்கொள்வதன் மூலம் ஏராளமான ஆரோக்கிய நன்மைகளைப் பெறலாம்.

பப்பாளியில் உள்ள சர்க்கரை இரத்தத்தில் கலக்காமல் வைட்டமின் ஏ யை உற்பத்தி செய்து இரத்தத்தில் கலக்கிறது என்கிறது மருத்துவ ஆராய்ச்சி. மேலும், நோய் கிருமிகளை அண்ட விடாமல் இரத்தத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள உதவுகிறது. பப்பாளி பழத்தில் அதிகளவு நார்ச்சத்துக்கள் மற்றும் குறைந்த அளவிலான கிளைசெமிக் இன்டெக்ஸ் நிறைந்துள்ளது. எனவே, பப்பாளியை உட்கொள்வது இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தி, இன்சுலின் உணர்திறனை மேம்படுத்த உதவுகிறது.

மேலும், பப்பாளியில் உள்ள பீட்டா கரோட்டீன் போன்ற ஆன்டி ஆக்ஸிடன்ட்டுகள் நீரிழிவு நோய் தொடர்பான சிக்கல்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

தினமும் பப்பாளி சாப்பிட பித்தத்தை தெளிய வைக்கும். கல்லீரல், கணையம், சிறுநீரகம், பெண்களுக்கு ஏற்படும் மாதவிலக்கு பிரச்னை, இரத்த சோகை என பல்வேறு நோய்களை எதிர்க்கும் சக்திகளையும் உற்பத்தி செய்யும். பப்பாளி பழத்தை தினமும் 250 கிராம் சாப்பிட்டு வர சிறுநீரில் உள்ள சர்க்கரை அளவு வெகுவாகக் குறையும்.

குழந்தை பெற்ற பெண்கள் பப்பாளி காயை சமைத்து சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். ஆன்டிபயாடிக் மருந்துகளை அதிகமாக எடுத்துக் கொள்கிறவர்களுக்கு குடல் தசைகளில் அரிக்கப்பட்டிருக்கும் பாக்டீரியாக்கள் பப்பாளி சாப்பிட சுத்த மாகிவிடும். எனவே, மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறவர்கள் அவசியம் பப்பாளி சாப்பிட வேண்டும். குழந்தைகளை அதிகம் பாதிக்கும் குடல் நாடா புழுக்களை முற்றிலும் அழிக்கும் ஆற்றல் மிக்கது பப்பாளி பழம்.





மூலம் கோடைக்காலத்தில் ஏற்படும் முடி சார்ந்த பிரச்னைகளிலிருந்து விடுபடலாம்.

பப்பாளி இலை சாறு அருந்துவது உடலில் நோயெதிர்ப்புச் சக்தியை அதி கரிக்க உதவுகிறது. இதன் பண்புகள் பல்வேறு நோய்த்தொற்றுக்களிலிருந்து உட லைப் பாதுகாக்க உதவுகிறது.பப்பாளி இலை சாறு 30 மில்லி 3 நாட்கள் சாப்பிட வைரஸ் காய்ச்சல் கட்டுப்படும்.

கோடைக்காலத்தில் உடலை நீரேற் றமாக வைத்திருப்பது அவசியமாகும். எனவே உடலை நீரேற்றமாக வைத்திருக்க பப்பாளியை பகலில் சாப்பிடலாம். மேலும், பப்பாளியில் அதிகளவு நீராதாரம் நிறைந்துள்ளதால், இவை உடலில் நீரிழப்பு ஏற்படாமல் பாதுகாக்க உதவுகிறது. கூடுதலாக, உடலுக்குத் தேவையான ஊட் டச்சத்துக்களையும் பப்பாளி தருகிறது

பப்பாளியில் பாக்டீரியா எதிர்ப் புப் பண்புகள் மற்றும் ஆன்டி ஆக்ஸி டன்ட்டுகள் நிறைந்துள்ளன. இவை சருமப் பிரச்னைகளைத் தடுக்க உதவுகிறது. மேலும், சருமத்தில் ஏற்படும் வீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பப்பாளி உதவுகிறது. பப்பாளி பழ கூழ், மஞ்சள் தூள், விளக்கெண்ணெய் கலந்து கால் பாதங்களில் தடவி வர கால் பாத வெடிப்புகள் நீங்கி பாதங்கள் அழகாகும். பேரீச்சம் பழம், கிஸ்மிஸ் பழத்தை வெந்நீரில் ஊற வைத்து அதனுடன் பப்பாளி பழக்கூழை கலந்து முகத்தில் தேய்த்து வர, முகம் புதுப்பொலிவு பெறும். கரும்புள்ளிகள் மறையும். பல்வேறு சரும பிரச்னைகளைத் தடுக்க உதவுகிறது.

பப்பாளியில் ஃபோலிக் அமிலம் மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. இவை வழுக்கையைத் தடுக்க உதவுகிறது. இது மயிர்க்கால்களுக்கு இரத்த ஓட்டம், ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை அளிக்கிறது. மேலும் இது ஆரோக்கியமான முடி வளர்ச்சியை ஆதரிக்கிறது. இதன்

பப்பாளி பழத்தில் நன்மை தரும் சேர்மங்கள் நிறைந்துள்ளதுடன்,புரதங்களை உடைக்க உதவும் செரிமான நொதியான பாப்பைன் நிறைந்து காணப்படுகின்றது. இவை செரிமான அமைப்பிற்கு உணவை திறம்பட பதப்படுத்த உதவுகின்றது. பப்பாளி கரோட்டினாய்டுகள், ஆல்கலாய்டுகள், மோனோடெர்பெனாய்டுகள், ஃபிளா வனாய்டுகள் மற்றும் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் ஆகியவை நிறைந்துள்ளது. பப்பாளியின் பால் எய்ட்ஸ்யையும், புற்றுநோய்யையும். கட்டுப்படுத்தும்.

பப்பாளி அதிகம் சாப்பிட கர்ப்பிணிகளுக்கு கருச்சிதைவு ஏற்படும், உணவுக் குழாய் தடை பட வாய்ப்பு உள்ளது. சர்க்கரை அளவு குறையும் அபாயம் உள்ளது. பப்பாளி விதை ஆண்மையை பாதிக்கும், வயிற்று பிரச்னை ஏற்படும், அறுவை சிகிச்சை செய்வோர் பப்பாளி சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும், பப்பாளியிலுள்ள சில சேர்மங்கள் இதயத் துடிப்பை அதிகரிக்கும். பப்பாளியை தோல் நீக்கி சாப்பிட வேண்டும். இல்லையெனில் உடலில் நச்சுத்தன்மை அதிகரிக்கும்.

தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY




# இலங்கையின் மின்சாரக் கட்டணங்கள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பு –

## நிதி ஒழுங்குக்கான அவசியம் மற்றும் எதிர்காலப் பாதைகள்

இலங்கையின் மின்சாரத் துறையில் காணப்படும் நிதிச் சிக்கல்கள் மற்றும் செலவீன அதிகரிப்பை ஒட்டியுள்ள வகையில், சர்வதேச நாணய நிதியம் (*IMF*) ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டு, மின்சாரக் கட்டணங்களை மறுசீரமைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. இது இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட நிதி வசதி (*Extended Fund Facility*) திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வை நிறைவேற்றுவதற்கான ஒரு கட்டாய முன்னிலை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிதி சுமையை சமனாக்க வேண்டிய அவசியம்**

*IMF* இன் கூற்றுப்படி, இலங்கை மின்சார சபையின் தற்போதைய நிதிச் சுமை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. வருவாய் மற்றும் செலவீனங்களில் காணப்படும் பெரும் இடைவெளி, நாட்டின் நிதி ஒழுங்கை மேலும் சிக்கல்களில் ஆழ்த்தும் அபாயத்தை கொண்டுள்ளது. இதனை சமாளிக்க, மின்சாரக் கட்டணங்கள் '*cost-reflective*' (செலவுக்கு ஒப்பான)

முறையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, மின்சார உற்பத்திக்கான உண்மை செலவை கட்டணங்கள் பிரதிபலிக்க வேண்டும். இதன் மூலம் மின்சார சபைக்கு நிலையான வருவாய் உருவாகி, கடன்களைச் செலுத்தும் திறன் மேம்படும். இதன் மூலம் நிதிச் சுமை குறைந்து, அரசின் நிதிச் செலவுகள் கட்டுப்பாட்டுக்குள் வரலாம்.

### சாதகமான எதிர்வினைகள் – வரிகள் மீது அழுத்தம் குறையும்

*IMF* வெளியிட்ட அறிக்கையின்படி, மின்சாரக் கட்டணங்கள் நேர்மையாக சரிசெய்யப்படாமையால், நட்டத்தில் இயங்கும் மின்சார சபையின் கடன்கள் அதிகரிக்கின்றன. இதனால் அரசாங்கம் கடனைத் தீர்க்க வரிகள் மூலம் வருவாய் சேகரிக்க வேண்டிய நிலை உருவாகும். இது நேரடியாக வரி செலுத்தும் பொதுமக்களையே பாதிக்கக்கூடும்.

மாறாக, மின்சாரத் துறையை பொருளாதார ரீதியாக நிலைப்படுத்துவதன் மூலம், வரிகளின் அழுத்தம் குறையக்கூடிய வாய்ப்பு உருவாகும். இது பணவீக்கக் கட்டுப்பாடு, நிதிச் சீரமைப்பு மற்றும் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வாய்ப்புகளை உருவாக்கும்.

### முன்னேற வேண்டிய பாதை — கட்டண நுட்பமுறைகள் மற்றும் பாதுகாப்பு

மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பது பொதுமக்கள் மனநிலைக்கு எதிராக அமையக்கூடும். எனவே கட்டண திருத்தங்கள் கட்டுப்பாடுகளுடன், தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நிவாரணங்கள் இணைந்து அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்காக:

- குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு சிறப்புக் கட்டண திட்டங்கள் (*lifeline tariffs*)
- உயர் மின்சாரம் பயன்படும் வணிகத்துறைகளுக்கு கட்டண சலுகைகள்.
- மின்சார உற்பத்தி திறனை உயர்த்தும் இயற்கை ஆற்றல்களின் (*renewable energy*) மேம்பாடு

குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு சிறப்புக் கட்டண திட்டங்கள் (*lifeline tariffs*)

"*Lifeline Tariffs*" (சிறப்புக் கட்டண திட்டங்கள்) என்பது குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளை விரைவான அணுகலுடன் மற்றும் குறைந்த செலவில் வழங்கும் ஒரு சமூக நியாய அடிப்படையிலான கட்டண முறைமை ஆகும். இது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை பாதுகாக்கவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றது. இதோ அதற்கான விரிவான விளக்கம். *Lifeline tariff* என்பது ஒரு சமநிலை அடிப்படையிலான மின்சாரக் கட்டண திட்டமாகும், இது சமூக நீதியை உறுதி செய்வதுடன், அரசின் நிதி ஒழுங்கையும் நிலைநிறுத்த உதவுகின்றது.

### Lifeline Tariff என்பது:

குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு ஒரு அதிகபட்ச அளவுக்குள் (*ex: 30-60* அலகுகள் வரை) மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரத்தை மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கும் முறை.

- சாதாரண கட்டண விகிதங்களைவிட தாழ்ந்த விகிதத்தில் மின்சாரம் வழங்கப்படுகின்றது.
- இது ஒரு பொதுப் பங்களிப்பு அல்லது சமூக நல திட்டம் ஆகும்.

### நோக்கங்கள்:

1. சமூகப் பாதுகாப்பு — ஏழை மற்றும் நியாய வருமானம் கொண்ட குடும்பங்கள் விலைவாசி உயர்வால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தல்.
2. மின்சார அணுகலுக்கு சம உரிமை — அனைவருக்கும் இலகுவான மின்சார சேவையை உறுதி செய்தல்.
3. மின்சாரம் முறையாகப் பயன்படுத்த ஊக்கம் — நியாயமான அளவில் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடுகள் மூலம் சிக்கனமான செலவீனங்களை ஊக்குவிக்கும்.




**அமலாக்க முறை (உதாரணம்):**

*Lifeline Slab: 0 – 30* அலகுகள் - மிகக் குறைந்த வீதம் (*ex: Rs. 2/unit*)

*Subsidized: 31 – 60* அலகுகள் - நடுத்தர வீதம் (*ex: Rs. 6/unit*)

*Non-Subsidized: 61* அலகுகள் மேல் - முழுமையான விகிதம்

இது *Block Slab Tariff System* எனப்படும் – மேலும் யாருக்கெல்லாம் இந்தச் சலுகை வழங்கப்படும் என்பதை அரசு முடிவெடுக்க வேண்டும் (உதாரணமாக *Samurdhi* பெறுநர்கள், *BPL* குடும்பங்கள், முதலீட்டுச் சான்று பெற்றவர்கள் போன்றோர்).

**உலக நாடுகளில் நடைமுறை:**

- இந்தியா – மாநில வாரியான லைஃப்லைன் (*Lifeline*) திட்டங்கள் (*ex: 0–50* அலகுகள் வரை இலவசமாக வழங்கும் மாடல்கள்).
- பாகிஸ்தான் – *100* அலகுகள் வரை *Lifeline Category;* மேலதிக சேவைகள் விதிவிலக்கு இன்றி.
- தென்ஆப்பிரிக்கா – *Free Basic Electricity (FBE)* என்கிற திட்டம் மூலம் *50* அலகுகள் வரை இலவசமாக வழங்குகின்றது.
- பெரு/பொலிவியா – *Lifeline Tariffs* மூலம் காடுகளுக்கு அருகிலுள்ள ஏழை மக்கள் பாதுகாக்கப்படுகின்றார்கள்.

**சவால்கள்:**

- பயனாளிகளை சரியாக அடையாளம் காண்பது.
- திட்டத்தின் நிதிச் சுமையைத் தீர்மானிக்க அரசின் திறன்.

- கட்டணத் திருத்தங்கள் செய்யப்பட்டபின் வசூல் நெறிமுறைகளை சீரமைத்தல்.

**நன்மைகள்:**

- எளிய குடும்பங்கள் நிவாரணம் பெறுகின்றார்கள்.
- மின்சாரத்தை நியாயமாகப் பயன்படுத்தத் தூண்டும்.
- அரசின் நலத்திட்ட நோக்கங்களை நிறைவேற்றும்.

### உயர் மின்சாரம் பயன்படும் வணிகத் துறைகளுக்கு கட்டண சலுகைகள்.

உயர் மின்சாரம் பயன்படும் வணிகத் துறைகளுக்கான கட்டண சலுகைகள் என்பது, அதிக அளவில் மின்சாரம் பயன்படுத்தும் வணிகம் மற்றும் தொழில்துறைகள் (*High-Consumption Commercial & Industrial Users*) மீது பொருளாதார வளங்களை ஊக்குவிக்கும் நோக்கில் அரசு அல்லது மின்சார வாரியங்கள் வழங்கும் தனிச்சிறப்பு அடிப்படையிலான விகித (*Tariff*) அமைப்பாகும்.

### இந்த திட்டத்தின் நோக்கம் என்ன?

1. தொழில்துறையை ஊக்குவிக்க – தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள், தொழில் முனைவோர் ஆகியோர் செயல்பட கூடுதல் ஊக்குவிப்பு தரும் வகையில் குறைந்த அல்லது நிலையான கட்டண திட்டங்கள்.
2. மொத்த உற்பத்தி செலவைக் குறைக்க – மின் செலவுகள் தொழில்துறையில் முக்கிய கூறாக இருப்பதால், தனிச்சிறப்பு கட்டணங்கள் மூலமாக அவர்களின் மொத்த செலவை கட்டுப்படுத்த உதவுதல்.
3. பன்னாட்டு போட்டியோடு இணைத்தல் – முதலீட்டாளர்களுக்கு ஈர்ப்பு ஏற்படுத்தும் வகையில் குறைந்த கட்டணத்துடன் தொழில் நடாத்தும் வாய்ப்புகளை உருவாக்குதல்.

### உயர் பயன்பாட்டாளர்களுக்கான விகித முறைமைகள் (Tariff Models) Time-of-Use Tariff (ToU)

மின்சாரம் அதிகபட்சமாக (*Peak Hours*) பயன்படுத்தப்படும் நேரங்களில் விலை உயரமாகவும், குறைவான நேரங்களில் (*Off-Peak*) விலை குறைவாகவும் அமையக்கூடிய முறை. தொழில்கள் இரவு நேரங்களில் உற்பத்தி செய்ய ஊக்கம் தரும்.

### Bulk Tariff

மொத்தமாக (*Bulk*) மின்சாரம் வாங்கும் நிறுவனங்களுக்கு குறைந்த விகிதம். திட விருப்பங்களை ஏற்படுத்தும்.

### Demand-Based Tariff

நிறுவனத்தின் அதிகபட்ச தேவை (*Maximum Demand*) அடிப்படையில் விகிதம் நிர்ணயம். தொழில்கள் தங்கள் உபயோகத்தை திட்டமிட்டுப் பயன்படுத்த ஊக்குவிக்கிறது.

### Negotiated Tariff

முக்கிய முதலீட்டாளர்களுடன் முற்றிலும் தனிப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் வழங்கப்படும் விகிதம். (மிகப்பெரிய தொழில்கள், *FTZs*).

**சில நாடுகளில் நடைமுறை (உதாரணம்):**

- இந்தியா – *HT Tariff (High Tension), LT Tariff (Low Tension)* என வகைப்படுத்தப்பட்டு வணிகம்/தொழில்களுக்கு விரிவான கட்டண விகிதங்கள் வழங்கப்படுகின்றன.
- மலேசியா – '*Incentive Tariffs*' எனப்படும் பன்முக நன்மைகளை உயர்தர வணிக பயன்பாட்டாளர்கள் பெறுகிறார்கள்.
- தாய்லாந்து/வியட்நாம் – *Export-oriented industry*-களுக்கான மிகக்குறைந்த மின் கட்டணங்கள் ஊக்குவிப்பு திட்டமாக வழங்கப்படுகின்றன.

**இலங்கையில் நடைமுறை வாய்ப்புகள்:**

- தொழில்துறைக்கான உயர் நுகர்வு திட்டங்கள்

இலங்கையின் வாகன உற்பத்தி, தொழிற்போக்கிகள், ஆடை ஏற்றுமதி உள்ளிட்ட

துறைகளுக்கு இடையில் *Differentiated Tariffs* கொண்டு வருவது முக்கியம்.

- அதிக சேமிப்பு வழங்கும் *ToU* சலுகைகள் இரவு நேர உற்பத்தியை ஊக்குவிக்க, மின்சாரம் குறைந்த விலையில் வழங்கலாம்.

### நன்மைகள்:

1. தொழில்களின் செயல்திறன் உயர்வடையும்.
2. தொழில் முதலீடுகளுக்கு வாய்ப்பு அதிகரிக்கும்.
3. மின்சாரம் விரிவாக பயன்படுத்தப்படும் நிறுவனங்கள் கட்டுப்பாடோடு செலவுகளை மேலாளிக்க உதவுகின்றது.
4. மத்திய அரசுக்கு வருமானம் நிலையான முறையில் வரும்.

### சவால்கள்:

- அதிக நுகர்வாளர்களுக்கான சலுகைகள் பிற சாதாரண நுகர்வாளர்களுக்கு பாதிப்பாக இருக்கக் கூடும்.
- மின் சபையின் வருமானத்தில் சீர்கேடு ஏற்படாமல் திட்டமிடல் தேவை.
- நியாயமான அடிப்படையில் யாருக்கு சலுகை என்பதை தீர்மானிக்க திறந்த சட்ட/விதிமுறைகள் அவசியம்.

உயர் மின்சாரம் நுகர்வு செய்வோருக்கான கட்டண சலுகைகள் என்பது தொழில் துறையை வளர்த்தெடுக்க, முயற்சியாளர்களுக்கு ஊக்கம் தர, மற்றும் நாட்டின் பொருளாதார போட்டித்திறனை மேம்படுத்த ஒரு முக்கியக் கட்டணத் திட்டமாகும். இதனைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் பொழுது, மின்சபை மற்றும் பொதுப் பங்களிப்பு மையங்களின் நிதிச் சுமையையும் சமநிலைப்படுத்த முடியும்.

### மின்சார உற்பத்தி திறனை உயர்த்தும் இயற்கை ஆற்றல்களின் (*Renewable Energy*) மேம்பாடு

இலங்கையின் எதிர்கால எரிசக்தி பாதுகாப்புக்கும், நிதியியல் ஸ்திரத்தன்மைக்கும் பங்களிக்கும் முக்கிய தளமாக மின்சார உற்பத்தி திறனை உயர்த்தும் இயற்கை ஆற்றல் (*Renewable Energy*) துறை முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

**இது குறித்து விரிவாக விளக்கம் கீழே:**

இயற்கை ஆற்றல் (*Renewable Energy*) என்றால் என்ன?

இயற்கையாகவே கிடைக்கும் மற்றும் முடிவில்லா வளங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதையே 'இயற்கை ஆற்றல்' என அழைக்கப்படுகின்றது. இவை:

- சூரிய ஆற்றல் (*Solar Power*)
- காற்றாலை (*Wind Power*)
- நீராற்றல் (*Hydropower – Small/Mini Hydro*)
- உயிரி எரிசக்தி (*Biomass*)
- கடல் அலை/அலைமோதி ஆற்றல் (*Ocean/Tidal*)

### இலங்கையில் இயற்கை ஆற்றலின் தேவையும் முக்கியத்துவமும்

1. மின்சாரக் கட்டணத்தை நீடித்தும் குறைக்கவும்:
   எரிபொருள் (*Fuel*) இறக்குமைக்குப் பதிலாக இயற்கை ஆற்றல் பயன்படுத்தப்பட்டால் செலவுகள் குறையும்.

2. நாணய மோசமடையும் அபாயத்தைக் குறைக்க:
   எரிபொருள் இறக்குமதிக்கு அதிகமாக வெளிநாட்டு நாணயம் செலவாகும். இதனால் ரூபாயின் மதிப்பு பாதிக்கப்படுகின்றது.

3. மின்சார விநியோகம் தொடர்ச்சியாக இருக்க:
   உற்பத்தி திறன் அதிகரிக்கப்படும் போது, மின்வெட்டு (*Power Cut*) குறையும்.

4. சூழலியல் நன்மைகள்:
   கார்பன் (*Carbon*) வாயுவின் வெளியீடு குறைவாக இருப்பதால் சுற்றுச்சூழலுக்கு அதிகளவு பாதிப்பில்லை.

### இலங்கையில் தற்போது உள்ள

## இயற்கை ஆற்றல் பங்களிப்பு

- இலங்கை மொத்த மின்சார உற்பத்தியின் 40% வரை (2023 நிலவரப்படி) இயற்கை வளங்களிலிருந்து பெறப்படுகின்றது.
  - o Hydropower – 30% வரை
  - o Solar, Wind & Biomass – 10%+
- இலங்கை அரசின் 2030 இலக்கு:
  70% மின்சாரம் இயற்கை ஆற்றலிலிருந்து பெறப்படும் வகையில் நாட்டை மாற்றுவது.

## மேம்படுத்த வேண்டிய முக்கிய அம்சங்கள்

- சூரிய ஆற்றல் :
  வீடுகளிலும் தொழில்களிலும் Rooftop Solar Panel ஊக்குவிப்பு; Net Metering திட்டங்கள்
- காற்றாலை
  மன்னார், ஹம்பாந்தோட்டை போன்ற இடங்களில் புதிய Wind Farms அமைத்தல்.
- உயிரி எரிசக்தி (Biomass)
  விவசாய கழிவுகளை உபயோகித்து மின்சாரம் தயாரிக்கும் Micro Plants.
- Mini Hydro
  Existing ஆறுகளில் உள்ள அணைகளின் திறனை மேம்படுத்தல்

## பொருளாதார நன்மைகள்

- தொழில்துறை வாய்ப்புகள்:
  புதிய வேலைவாய்ப்புகள் (Installers, Technicians, Engineers) உருவாகின்றன.
- முன்னோடி முதலீட்டாளர்களுக்கு வரிசலுகைகள்:
  Board of Investment (BOI) ஊக்கத் திட்டங்கள் மூலம் பன்னாட்டு முதலீடு ஊக்குவிக்கப்படுகின்றது.
- மின் சபைக்கு சுயநிர்ணயத் திறன்:
  எரிபொருள் மாறுபாடுகளால் ஏற்படும் நஷ்டங்களை தவிர்க்க இயலும்.

சவால்கள்

- தொழில்நுட்ப தளவாடங்கள் (Technology, Grid Integration)
- முதலீட்டுத் தொகை அதிகம்
- காணிகள் (Land access) மற்றும் அனுமதிகள்

கடந்த ஆண்டுகளில் செய்யப்பட்ட முக்கிய முன்னேற்றங்கள்:

- Soorya Bala Sangramaya திட்டம் (சூரிய ஆற்றலுக்காக)
- Wind Power Development Projects in Mannar and Puttalam
- Private Power Purchase Agreements மூலம் சுயமுயற்சி நிறுவனங்கள் மின்சார உற்பத்தியில் பங்கெடுக்க அனுமதி

இயற்கை ஆற்றல்களின் மேம்பாடு இலங்கையின் மின்சார நெருக்கடியை தீர்க்கும் நிலையான தீர்வாக அமையும். இது மின்சாரக் கட்டணங்களை நீடித்த நிலையிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், நிதிசார்ந்த சீர்திருத்தங்களையும் ஒரே நேரத்தில் அடைய வழிவகுக்கும்.

இலங்கை மின்சாரத் துறையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் நிதிச் சிக்கல்கள், நாட்டின் பொருளாதாரத்தின் நிலைப்பாடை மீது நேரடியான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் வலியுறுத்தலின்படி, துறைசார் செலவுகளை ஈடுகட்டும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது. இந்த நடவடிக்கைகள் சரியான திட்டமிடலுடனும், சமூக நீதியுடன் கூடிய அணுகுமுறையுடனும் மேற்கொள்ளப்பட்டால், மின்சாரச் சபையின் நிதிச் சுமை குறைந்து, நாட்டின் நிதிச் சீர்திருத்தங்கள் முன்னேறக் கூடிய நிலை உருவாகும். இதன் மூலம் வருங்காலத்தில் மின்சாரக் கட்டணங்களில் ஒரு நிலைத்தன்மையும், மக்களுக்கு நிவாரணமுமாக உருவாகும்.



ஸ்ரீ AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK), FCPA (Aust.)
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA)
பட்டயக்கணக்காளர், வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகர்

# பார்வை



காலையிலோ மாலையிலோ வீடுவாசல் பெருக்குவது என்பது ஒரு பெரிய வேலையாகத் தெரிகிறது. வெளிநாடுகளில் உள்ளது போல துடைப்பான்களை வைத்திருக்க நம்மால் முடியாது காரணம் நாம் இன்னும் வீட்டிற்கு வெளியே முற்றங்களை இயற்கையாக வைத்திருக்கிறோம் அதாவது மண்ணாகவே வைத்திருக்கிறோம். ஒருசிலரைத்தவிர என்பதையும் சேர்த்துக் கொள்வோம். வீட்டிற்குள் சலவைக்கல் பதித்தால் முற்றமும் மண்ணாக இருக்கலாகாது.

தும்புத்தடியை வைத்து சுத்தம் செய்ய அடிக்கடி குனிந்து, மண்டியிட்டு, வளைந்து, நெளிந்து தான் வீட்டைச் சுத்தம் பண்ண வேண்டும்.; அதுவே ஒரு தேகப்பயிற்சியாக இருக்கும். இப்போது இதெல்லாம் பெண்களுடைய





வேலை கிடையாது. குனிந்து வீடு கூட்டி குந்தியிருந்து அடுப்பூதி; என்று என் அம்மா பேசத் தொடங்கிய காலம் அறுபதுகளின் நடுப்பகுதி. காரணம் நான்; என் அக்காள் இருவரும் மண்ணில் உயரமான திண்ணைகட்டி அதில் அடுப்பை தூக்கி வைத்துவிட்டு நின்று கொண்டு கிழற, வறுக்க, அவிக்க என தொடங்கிவிட்டோம். ஆனாலும் எங்களுக்கு நாரியிலோ முதுகிலோ சதை பிதுங்கித் தொங்கவில்லை. சொல்லப்போனால் எமது உருவம் விகிதசமமாக இருந்தது. இடுப்பினளவுக்கு ஏற்ற மார்பளவு. அதற்கேற்ற பிட்ட அளவு என ரெடிமேற் ஆடைத்தொழிலுக்கான அளவுகளில் உடல் கச்சிதமாக இருந்தது சொல்லப்போனால் எங்களுக்கு வேறு வேலைகள் இருந்தன.

வீடு என்றால் படுத்தெழும்பவும், முக்கியமான பொருட்களை வைக்கவும் என்றிருந்தது. அலுமாரி கிடையாது. 'பெட்டகம்' என்று ஒன்று வீடுகளில் இருக்கும். அழகிய கடைச்சல் வேலை செய்த முகப்பும் கால்களுமாக வைரமான மரத்தில் செய்து சிலபல இரகசிய அறைகளும் கொண்டதாக அவரவர் தகுக்கேற்ப நாலடி முதல் ஆறேழு அடி வரை நீளமும் அதற்கேற்ற அகலமும் கொண்டதாக இருக்கும்.

அதற்குள் அந்த வீட்டின் பாரம்பரிய செல்வங்களை வைத்து அவை பாத்திரங்கள் உட்பட ஆடைகள். பணம், காணி உறுதிகள்; நகைநட்டுக்கள் அததற்கான ரகசிய அறைகளும் இருக்கும். பெரிய காத்திரமான பூட்டும் தொங்கும். அதை நகர்த்தி வைக்கவே நாலைந்து பேர் தேவை. அவ்வளவு பாரமானது. அதுவும் நிலத்திலிருந்து ஒரடிக்குமேல் உயரமாக நிற்பதால் அதற்குக் கீழ் குப்பை இராது. திருடர்களால் இதை கிளப்பவும் முடியாது உடைக்கவோ திறக்கவும் முடியாது. பாரிய யுத்தங்களில் அகப்பட்டும் இன்னும்கூட மீதமிருக்கும் பெட்டகங்கள் உண்டு.அப்படியான பெட்டகங்கள் யாழ்ப்பாணக் கிராமங்களிலோ கண்டாவளை, வட்டக்கச்சி போன்ற இடங்களிலோ கண்டிருக்கிறேன்.

உட்கார பின்னல், அல்லது பிரம்பு நாற்காலி. வயதானவர்கள் படுக்க ஒரு சாய்வு நாற்காலி என இரண்டொரு ஆசனங்கள் இருக்கும். மேலதிகமாக ஆட்கள் வந்தால் பாய்விரித்து உட்காரச் சொல்வார்கள். இதோ பாருங்கள் குசன்வைத்த இந்த செற்றிகதிரைகளுக்கு கீழே பாம்பு கிடந்தாலும் தெரியாது. விளக்குமாறும் நுளையாது. அதற்குள் அடையும் தூசியால் தும்மினாலும் பரவாயில்லை மேலாக துடைத்து கண்ணைக்கவரும்படி செய்து வைக்கலாம் . கட்டில்களும் நிலமட்டம்

தளையடித்து வைப்பது நாகரீகம் அதையும் காற்றுறிஞ்சித் துடைப்பானை வைத்து மாதமொருமுறை சுத்தம் செய்வதுடன் சரி. மேசைகள் சிறு தேநீர் மேசைகள் என அவையும் வீடு நிறைந்து கிடக்கிறது. போதாதற்கு பூச்சாடிகளையும் வீட்டிற்குள் வைப்பதும் ஒரு பழக்கம். அப்பாடி! ஒரு வரவேற்பறையை (இதை ஒரே வார்த்தையில் மால் என்போம்) சுத்தம் செய்வதற்குள் நாரி அல்லு விட்டுப்போகிறது. (அல்லு என்றால் எலும்பு என்று அர்த்தம். சென்னைத்தமிழ்)

அதிலும் என் மூத்தவளை சுத்தம் செய் யச் சொன்னால் "எதுக்கு தேவையில்லாத சாமானெல்லம் போட்டு வச்சிருக்கிறியள். கொண்டே ஒரு அறைக்க போட்டுப்பூட்டி வையுங்க" என்பாள். அவளுக்கு குனிய நிமிர பஞ்சி என நான் நினைத்தாலும், அந்த செற்றிகளில் வீட்டிலுள்ளவர்கள் பெரிதாக உட்காருவது இல்லை. அவை அழுக்காகா மல் இருக்க ஒவ்வொன்றையும் போர்வைகளால் மூடி வைத்திருக்கிறோம். அப்படியும் போர்வைகளை வாரம் ஒருமுறையாவது சலவை செய்யத்தானே வேண்டும். காராஜ் ஒன்றில் வேலைசெய்யும் குடும்பத்தலைவர் ஒரு போதும் அதில் உட்காரமாட்டார்.; அவரது உடல்வலிக்கு கட்டாந்தரைதான் நல்லது என்பார். வழக்கமாக அவர் மெத்தைகளில் படுப்பதில்லை. அவரோடு மனைவியிம் கணவனுக்காக மெத்தையை விட்டுவிட்டார். ஆனால் இருக்கிற நான்கு படுக்கை அறைகளிலும் கட்டிலும் மெத்தையும் உண்டு.

"யாருக்காக... இது யாருக்காக... இந்த மாளிகை வசந்த மாளிகை... என்று பாடத் தோன்றுகிறதா? விடையை நானே சொல்கிறேன். கணவரின் தங்கை கனடாவில் இருக்கிறாள். அவளுடைய வீட்டை வீடியோக் கோலில்... மன்னிக்கவும் ஒளிப்பட அழைப்பு என்பதைவிட இது இலகுவாகவும் புரியும்படியும் இருக்கும்.அதனால் ஆங்கிலச் சொற்களை தருகிறேன். ஆம் வீடியோக் கோலில்பார்த்ததிலிருந்துஅவள்இங்கேவரும் போது அதற்கு நிகரான ஒரு வீட்டை இங்கே வைத்திருப்பதன் அவசியத்தை உணர்ந்தே இந்த வீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அவளும் ஐந்து வருடங்களுக்கு முன் இங்கே மண்வீட்டில் பாயில் படுத்தெழும்பியவள்தான் அதே மண்குசினியில் அடுப்பெரித்து சமைத்து தட்டில் போட்டு திண்ணையிலிருந்து தின்றவள்தான் என்பது இவளுக்கும் மறந்து போச்சு. அவளுக்கும் மறந்து போச்சு. விளைவு, வீடுகளை பொருட்களால் நிறைத்து வைத்திருக்கிறோம். என் வீட்டிற்குள் இருக்கும் பொருட்களில் என் அன்றாடப்பாவனைக்கு உள்ளவை எத்தனை? வாரம் ஒருதடவை பாவனைக்கு தேவைப்படுவது எத்தனை, மாதம் ஒருமுறை பாவனைக்கு உதவுவது எத்தனை என்று பிரித்தால், உள்ளவற்றில் கால்வாசியும் தேறாது. பருவகாலங்களுக்கு அதாவது புத்தாண்டு, பொங்கல்; விரதங்கள் என பருவகாலங்களுக்கு பாவனைக்கு வருபவை ஒரு கணிசமான அளவில் இருக்கும். அதைவிட வருடம் ஒருமுறை அல்லது எப்போதாவது வரும் உறவினர்களுக்கு விலாசம் அடிப்பதற்காக வாங்கி மூடி வைத்திருப்பவை என பிரித்து உதறினால் அந்த காராஜ் தொழிலாளியின் முழு உழைப்பும் காராஜில் கொட்டிக்கிடக்கும் கழிவு இரும்புகளாக தெரியும் அவற்றை எறியவும் மனம்வராது. பாவனைக்கும் உதவாது. எப்பவாவது எடுக்கக்கூடிய சில ஆணிகளைத்தவிர.

■




தமிழ்க்கவி
சாகித்திய எழுத்தாளர்

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




**A** – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

**B** – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

**C** – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

காலக்கவிதை

# சட்டியும் பானையும்



நேற்றைக்குக் காலையிலே
நேரம்: ஒரு ஆறரைபோல்
முந்தாநாள் பாவித்த
மண்சோற்றுச்
பானைசோற்றுப்
பானையொன்று,
சொதி, கறிகள் வைத்த சட்டிஇ
தேனீர்க் குவளைசில,
கரண்டிகளோர் நாலைந்து,
அடிவிறாண்டிக் கள்ளுகையில்
பிடிகழலும் ஒரு அகப்பை,
எல்லாம் கிணற்றடியில்
எடுத்துந்து வைத்துவிட்டு
புளி, சாம்ல் டுக்கவென
போய்விட்டாள் என் மனைவி.

காலையிலே மனைவிக்கு
வேலைகொஞ்சம்
கூடவெனில்
வேலைக்குப் போகமுதல்
கூடமாட ஒத்தாசை
கொடுக்கின்ற ஆசைவரும்.
அந்தப் பொழுதுகளில்...
விறுவிறெனக் கழுவிவைத்து
வெளிக்கிடுதல் என் வழக்கம்.
அதுபோல நேற்றைக்கும்
அவசர அவசரமாய்
குசினிக்குள் போனவளோ
கிணற்றடிக்கு வரக்காணோம்
அடுப்பில் வைத்த ஏதோ
அடிப்பிடித்துக் கருகுவதும்
அவளதனை அகப்பையினால்
அவசரமாய் கிளறுவதும்
காதினதும் மூக்கினதும்
கவனத்தை ஈர்த்ததனால்
நானே கழுவவென
நகர்ந்தேன் கணற்றடிக்கு.

கிணற்றடிக்குப் போகவெனக்
கிட்ட நெருங்குகையில்
பாத்திரங்கள் வைத்திருந்த
பக்கத்தில் இருந்து சில
பேச்சுக் குரலோசை...
குசுகுசுப்பச் சத்தங்கள்...
'டங்' கென்றும்
'டிங்'கென்றும்
பாத்திரங்கள்
ஒன்றையொன்று
முட்டிக்கொள்வதுபோல்
சலசலப்புச் சத்தங்கள்...

என்ன நடக்குதங்கு...?
எவரங்கு போயிருப்பார்...?
மெல்ல நடந்துசென்று
மறைப்புக்காய்க் கட்டிவைத்த
கிணற்றுத் தட்டியதன்
ஓட்டையினால்
நோட்டமிட்டேன்.

என்ர முருகா...!
அல்லாவே...! ஆண்டவரே...!
இது என்ன கலியுகமோ...!
பானைசட்டி பாத்திரங்கள்
தம்முள்ளே பறையுதேடா...!

சட்டியொன்று பானையினை
'கரிபானை' என்கிறது;
பானையது சட்டியினை
'நீதான் கரி'யென்று
தொட்டெடுத்துக் காட்டியது.
பேச்சு அது முற்றிப்போய்
சச்சரவாய் ஆகிவிட,
சட்டியொன்று பானைக்கு
சள்ளையிலே இடிக்கிறதும்,
பானையது சட்டியினை
பிடித்துப்பால் தள்ளுவதும்
என் கண்ணால் கண்டதனை
என்னென்றுரைப்பேன் நான்?

அவைகளது உரையாடல்
அக்கணத்தில் என்மனதில்
'எம்மவர்கள் சிலபேரை'
எனக்குடனே நினைவுறுத்த
'அஹ்ஹஹ்ஹா ஹா' வென்று
அடக்கிவிட முடியாமல்
கெக்கட்டம் போட்டுநான்
கடுந்தொனியில்
சிரித்துவிட்டேன்.

அதனைக் கேட்டு அவைகள்
அமைதியாகி போயினவே...
இன்னுஞ் சிலபொழுது
அமைதியினைக்
காத்திருப்பின்
இன்னும் பலசெய்தி
அறிந்திருப்பேன் என்ன செய்ய?

கவிஞர் வ. வடிவழகையன்